tamilguru.lk

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## பிரிவெனாசிரியர்கள், அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2026

1.0 மேற்கூறப்பட்ட சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக இலக்கம் 2444/21 மற்றும் 2025.07.08 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது திருத்தம் மற்றும் இலக்கம் 2493/61 மற்றும் 2026.06.19 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் நான்காவது திருத்தம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையானது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் 2026 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் எனவும் மேற்படி பரீட்சைக்காகப் பிரிவெனாக்களில் கடமையாற்றும் பிரிவெனாசிரியர்கள், அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தோற்றுவதற்குச் சந்தர்ப்பமளிக்கப்படுகின்றது எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சை அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மட்டுமே நடாத்தப்படும் என்பதுடன், விண்ணப்பிக்கப்பட்ட நகரம் / நகரங்களைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனுமொரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்குப் போதுமான அளவு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லை எனின், அவ்விண்ணப்பதாரர்கள் அவர்களது இரண்டாவது விருப்பாகக் குறிப்பிட்ட நகரத்தில் அல்லது அருகிலுள்ள வேறு நகரம் ஒன்றில் அமைக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படுவர். மேலும், முன்மொழியப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது பெரும்பாலான நகரங்களில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான அளவு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லை எனின், பரீட்சையைக் கொழும்பில் மட்டுமே நடாத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

விண்ணப்பங்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Applications – Recruitment/E.B. Exams" ஊடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ்நிலை முறைமையில் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2026, செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன் 2026, செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் முடிவடையும். விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை ஊடாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து இரண்டு (02) அச்சிடப்பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொண்டு, அவ்விரு பிரதிகளிலும் உரிய பகுதிகளைக் கையெழுத்தால் பூர்த்தி செய்து, விண்ணப்பதாரியின் கையொப்பத்தைச் உறுதிப்படுத்தி, வலயக் கல்விப் பணிப்பாளரின் சான்றுப்படுத்தலுடன் அதில் ஒரு பிரதியைத் தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும். மற்றைய பிரதியைத் தேவைப்படும்போது சமர்ப்பிப்பதற்காகத் தன்னிடம் வைத்துக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்புவதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலையையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

2.0

I. இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர்.

II. பரீட்சார்த்தியாவதற்கு விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானிப் பத்திரிகையில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகளை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட நேரிடும்.

III. இப்பரீட்சைக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளின் கீழ்வரும் 12.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

IV. இப்பரீட்சைக்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரர்கள் தோற்றுவார்களாயின், அது பற்றிய தகவலை விண்ணப்பப்படிவத்தில் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும் என்பதுடன், அதற்குரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.0 **பரீட்சைக் கட்டணம்:**

இவ்வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை முதன்முறையாக நடாத்தப்படுவதனால் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

4.0 **விண்ணப்பங்களை அனுப்புதல்:**

நிகழ்நிலை (Online) மூலமான பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரினால் இணைய வழியில் சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது, முறைமைக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கோ அறியத்தரப்படும். நிகழ்நிலை மூலமான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது அவ்வறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

5.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமாக மண்டபப் பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

I. தேசிய அடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மூடாமலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். இதற்கு உடன்படாத விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த தருணம் முதல் பரீட்சை முடிவடைந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

6.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சரியாகப்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலை மூலம் மாத்திரமே வழங்கிவைக்கப்படும்.

பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்ட உடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிய விபரம் இணையதள அறிவித்தல் மூலமாக/ விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி (SMS) மூலமாக அறியத்தரப்படும். தனது அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளாத பரீட்சார்த்திகள் எவரேனும் இருப்பின், இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஏற்பாட்டு கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு தயாரித்த கோரிக்கைக் கடிதத்தை இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுடையதாக இருக்கும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்பிரதியை அருகில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். அனுமதி அட்டையைப் பரிசீலித்து பார்த்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களை மேற்கொள்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களுக்காகக் கோரப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7.0 விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது உரிய வினைத்திறன்காண் தடைத்தாண்டல் தேவையைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாகக் கருதப்படக் கூடாது.

8.0 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9.0 பரீட்சை விண்ணப்பதாரிகள் தமக்குக் குறிக்கப்படும் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்களினால் தேவையானவாறு கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பயணக் கட்டணம் செலுத்தப்பட மாட்டாது.

11.0 பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் மட்டுமே நடாத்தப்படும். அவற்றுள் தனது நியமனப் பாடத்திற்குரிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், தோற்றும் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12.0 மேலே குறிப்பிடப்பட்ட சேவைகளின் 2 ஆம் வகுப்பின் தரம் I இற்கு உயர்வு பெற்று நான்கு (04) ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னர் III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவ் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக, 2-I ஆம் தரத்திற்கு உயர்வு பெற்று 4 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் 2025.06.30 ஆம் திகதிக்குப் பின்னர் தரம் I க்கான பதவி உயர்வு கிடைக்கப் பெறவுள்ள ஆசிரியர்களும் தரம் I இற்கு உயர்வு பெறுவதற்காக III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைத் தேவையைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.0 **பரீட்சை நடைமுறை :**

13.1 **வினாக்களின் கட்டமைப்பு :**

கல்வி அமைச்சினால் e-thaksalawa உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, கீழே 13.2 இல் காட்டப்பட்டுள்ள சுயகற்றல் இதவடிவங்கள் தொடர்பான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும். இவ் வினைத்திறன்காண் தடைத்தாண்டலுக்கான எழுத்து மூலப் பரீட்சையானது அத்தொடர் புடைய அனைத்து இதவடிவங்களையும் உள்ளடக்கும் வகையில் பின்வருமாறு நடாத்தப்படும்.

| *கட்டமைப்பு* | *வினாக்களின் அமைப்பு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| I ஆம் வினாத்தாள் | பல்தேர்வு வினாக்கள் | 01 மணித்தியாலம் | 40 |
| II ஆம் வினாத்தாள் | கட்டமைக்கப்பட்ட வினாக்கள் மற்றும் பகுதியளவில் கட்டமைப்பட்ட வினாக்கள் | 02 மணித்தியாலங்கள் | 60 |

**குறிப்பு 1** - பகுதி I ஆக பாடம் சார்ந்த பகுதி I வினாத்தாள் வழங்கப்படும் என்பதுடன், அதில் 40 பல்தேர்வு வினாக்கள் அடங்கியிருக்கும். பகுதி II ஆக பாட அறிவோடு சார்ந்த பகுதி II வினாத்தாள் வழங்கப்படும் என்பதுடன், அதில் 04 பகுதியளவில்-அமைக்கப்பட்ட வினாக்கள் அடங்கியிருக்கும். அவ்விரு வினாத்தாள்களினதும் உள்ளடங்கிய அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

13.2 **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *வினைத் திறன் காண் தடைத் தாண்டல்* | *உரிய இதவடிவங்கள்* |
|---|---|
| III ஆம் வினைத் திறன்காண் தடைத்தாண்டல் | 1. உடல் மற்றும் உளவியல் நல்வாழ்வு |
| | 2. இருபத்தோராம் நூற்றாண்டின் பாடசாலை |
| | 3. செயல் ரீதியான ஆராய்ச்சி |

குறிப்பு 2 - சித்தியடைவதற்கு மேலே 13.1 அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பகுதி I மற்றும் பகுதி II இன் புள்ளிகளின் மொத்தக் கூட்டுத்தொகை 40% அல்லது அதற்கு மேற்பட்டதாகப் பெறப்பட வேண்டும்.

14.0 பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல் :- பரீட்சைப் பேறுகளை வெளியிடும் நடைமுறை பின்வருமாறு அமையும்.

I. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களினதும் பெறுபேறுகள் மாகாண மட்டத்தில் தனித்தனியாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இரண்டு பிரதிகளில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.

II. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும் குறித்த பரீட்சைப் பெறுபேற்றுப் பட்டியல்களின் இரண்டு பிரதிகளில் ஒரு பிரதியை, உரிய ஆசிரியர்களின் பரீட்சைப் பேறுகளைச் சரிபார்ப்பதற்கு இயலுமான வகையில் மாகாணக் கல்வி அமைச்சுக்கு/திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்குக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

III. அத்துடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளின் உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கும் தர உயர்வுகளுக்கும் உரிய வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களத்தினால் விண்ணப்பதாரியும் பதிவிறக்கம் செய்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும். அவ்வாறு பதிவிறக்கம் செய்து கொள்ளப்படும் பெறுபேற்றுப் பட்டியலை விண்ணப்பதாரி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அப் பேறுபேற்றுப் பட்டியல்களை வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வி அமைச்சு/மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து சரிபார்த்து உரிய உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும்.

IV. குறித்த சரிபார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மாகாண/வலயக் கல்வி உத்தியோகத்தர்களினால் உரிய ஆசிரியர்களின் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கும் தர உயர்வு வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

V. பரீட்சைப் பேறுகள் சம்பந்தமாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

15.0 இப்பரீட்சை அறிவித்தலின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத யாதேனுமொரு விடயம் தொடர்பிலும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

16.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படுமாயின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
“இசுருபாய",
பத்தரமுல்ல,
2026,செத்தெம்பர் 02.

அட்டவணை I

| *மாவட்டம்/ நகரம்* | *மாவட்டம்/ நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகல் | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

09-89